# தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -6

ஓ.மு.எண்.15623 பி19/90, நாள்.7.6.1991

பொருள் :

தொடக்கக்கல்வி - உதவி பெறுபவை - உதவிபெறும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் - திரு.சமுத்திரக்கனி என்பவருக்கு பி.எட் தேர்ச்சி ஊக்க ஊதிய உயர்வு வழங்குவது குறித்து தெளிவுரை வழங்குதல்.

பார்வை :

தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.2193/ஆ3/90, நாள்.27.02.90.

------

பார்வையிற்காண் கடிதத்தில் தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலர் கோவில்பட்டி நாடார் நடுநிலைப்பள்ளி இடைநிலை ஆசிரியர் திரு.எஸ்.சமுத்திரக்கனி என்பவர் தமிழாசிரியருக்கான தகுதி பெற்றதால் 21.9.88 முதல் நிரந்தரக் காலியேற்பட்ட தலைமையாசிரியர் பணியிடத்தில் பதவிஉயர்வு அளிக்கப்பட்டார் எனவும், தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்ட பின்னர் பி.எட்.,தேர்ச்சி பெற்றுள்ளாரெனவும், 5வது ஊதியக்குழு பரிந்துரையின்படி தலைமையாசிரியர் ஊதிய விகிதம் தமிழாசிரியர் ஊதிய விகிதத்தைவிட மேலான நிலையில் உள்ளதால் அன்னார் பி.எட் தேர்ச்சி பெற்றதற்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கலாமா? எனத் தெளிவுரை கோரியுள்ளார்.

போதிய கல்வித்தகுதியுடைய ஆசிரியர்கள் அதற்கு மேலும் கல்வித்தகுதி உயர்த்திக் கொள்வதால் மாணவர்கள் கல்வித்தரம் மேலும் உயரும் என்ற அடிப்படைக் காரணத்தை முன்னிட்டு அதுபோன்று ஆசிரியர்கள் கல்வித்தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதை ஊக்குவிக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு ஆணையை அரசு கொண்டு வந்துள்ளது. அரசாணை எண்.42, கல்வி, நாள்.10.1.69ம், அரசாணை எண்.107, கல்வி, நாள்.20.01.76ம் பல்வேறு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது போல, பி.எட்., படித்த தமிழாசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

www.kalvikural.com

தமிழாசிரியர் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியராகப் பணியாற்றிய காரணத்தினாலும், தமிழாசிரியர் ஊதிய விகிதத்தைவிட தலைமையாசிரியர் ஊதியவிகிதம் அதிகமானது என்பதால் அன்னாருக்கு வழங்கப்படும் ஊக்க ஊதிய உயர்வு நிறுத்தி வைப்பது அவசியமில்லை, ஏனெனில் மேற்படி தலைமையாசிரியருக்கும் தமது கல்வித்தரத்தை உயர்த்திக் கொண்டு வகுப்புகளை நடத்தி வருகிறார்.

எனவே திரு.எஸ்.சமுத்திரக்கனி என்பவர் ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட தகுதியுடையவர் என தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவிக்கப்படுகிறார்.

தேவாசீர்வாதம்
தொடக்கக்கல்வி இயக்குநருக்காக

www.kalvikural.com

**பி.லிட் முடித்து நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராக பதவிஉயர்வு பெற்றோர் பிறகு பி.எட்., முடித்தால் அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம்!**
**அதற்குப்பிறகு முதுகலைப் படிப்பு முடித்தாலும் 2வது ஊக்க ஊதியஉயர்வு வழங்கலாம் என்பதற்கான தமிழ்நாடு தகவல் ஆணையம் வழங்கியுள்ள ஆணையின் நகல்**
**தொடக்கக்கல்வி இயக்ககத்திலிருந்து 1991இல் வழங்கப்பட்ட தெளிவுரைக்கடிதம்!**
**3வது ஊக்க ஊதிய உயர்வு அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறிவோமாக!**

## தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018 தொலைபேசி 2434 7590

<u>வழக்கு எண்.15458/விசாரணை/C / 2013</u>

<u>விசாரணை நடைபெற்ற நாள். 18.09.2013</u>

| | | |
|---|---|---|
| முன்னிலை | : | திரு.கிறிஸ்டோபர் நெல்சன், I.P.S.,(Retd)<br>மாநிலத்தகவல் ஆணையர் |
| மனுதாரர் | : | திரு.த.செல்வராஜ்,<br>51, வடக்கு தெரு, சிவல்வினைப்புதூர், உடன்குடி - 628 203 |
| பொது அதிகார அமைப்பு | : | பொதுத் தகவல் அலுவலர்<br>தொடக்கக்கல்வி இயக்ககம், கல்லூரி சாலை, சென்னை - 6 |

----

இவ்வாணையத்தால் இன்று (18.9.2013) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள் 2012 விதி 7ன் கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுத்தகவல் அலுவலர் திரு. எ.புகழேந்தி, துணை இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டப் பிரிவு 6(1)ன் கீழ் 25.2.2013 நாளிட்ட தம்முடைய மனுவில் பி.எட்., படிக்காமல் பி.லிட் தமிழ் மற்றும் ஆசிரியர் பயிற்சி முடித்து தமிழாசிரியர் தகுதியில் நடுநிலைப்பள்ளியில், தலைமை ஆசிரியராக பணிபுரியும் ஒருவர் பின்னர் பி.எட் முடித்தால் முதல் ஊக்க ஊதியம் பெற தகுதி உடையவரா என்ற தகவலைக் கோரி விண்ணப்பித்துள்ளார். பொதுத்தகவல் அலுவலர் தம்முடைய 11.3.2013 நாளிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 விதி 2(1)ன் கீழ் மனுதாரரின் மனு பதில் அளிக்கத்தக்கதல்ல என்பதையும், கோப்பிலுள்ள தகவல்கள் கோரப்பட்டால் மட்டுமே தகவல் அளிக்க இயலும் என தெரிவித்துள்ளதை இவ்வாணையத்தால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

3. மனுதாரர், தமக்கு முழுமையான தகவல் ஏதும் கிடைக்கப் பெறாததால், தகவல் பெறும் உரிமைச்சட்டம், பிரிவு 19 (1)ன்கீழ் தமது 25.3.2013 நாளிட்ட தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை, முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். அதற்கு பின்பாகவும் மனுதாரருக்கு தாம் கோரிய தகவல் ஏதும் கிடைக்கப் பெறாமையால், தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 19(3)ன்கீழ் தமது 5.4.2013 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க, அம்மேல்முறையீட்டின் மீது இன்று (18.9.2013) விசாரணை நடைபெற்றது.

4. விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரருக்கு 17.9.2013 நாளிட்ட கடிதத்தில் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அக்கடித நகலை விசாரணையின்போது சார்பு செய்தார். மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலை ஆய்வு செய்ததில், மனுதாரர் கோரியபடி அவர் ஊக்க ஊதியம் பெற தகுதியுடையவர் என்றும், அதற்கு ஆதாரமாக கல்வித்துறை, அரசு ஆணை நிலை எண். 107, நாள்.20.1.1976 ஆணையின் நகல் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதாக, பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். ஆனால் மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான எவ்வித ஆதாரத்தையும் விசாரணையில் சார்பு செய்யவில்லை. எனவே இவ்வழக்கு இத்துடன் முடித்து வைக்கப்பட்ட போதிலும் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு 17.9.2013 நாளிட்ட கடிதத்தில் அனுப்பப்பட்ட தகவலை, அவர் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்புச் செய்ததற்கான ஆதாரத்துடன் அறிக்கையினை, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள், இவ்வாணையத்திற்கு அளிக்க வேண்டுமென இதன்மூலம் பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள்.24.9.2013

மாநில தகவல் ஆணையர்

<u>வழக்கு எண்.15458/விசாரணை/C / 2013</u>

பெறுநர்

பொதுத்தகவல் அலுவலர்
தொடக்கக்கல்வி இயக்ககம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
**திரு.த.செல்வராஜ்** 51, வடக்குத் தெரு, சிவல்வினைப்புதூர், உடன்குடி - 628 203

www.kalvikural.com